# NEHRU MEMORIAL COLLEGE (AUTONOMOUS)

**NATIONALLY ACCREDITED WITH "A" GRADE BY NAAC**

**PUTHANAMPATTI,TRICHY – 621007**

**DEPARTMENT OF TAMIL**

**PG**

**COURSE OUTCOME (COS)**

## முதற்பருவம்

### CC Iஇக்கால இலக்கியம் -1(கவிதை,நாடகம், பயண இலக்கியம்)

**கற்றல் விளைவுகள் (Course Outcome)**

- மனித உறவின் தன்மைகளையும் சிறப்பினையும் அறிந்துகொள்வர் .
- இயற்கையைப் போற்றும் உணர்வு பெறுவர்.
- கவிதைப் போக்கின் பல்வேறு வளர்ச்சி நிலையினை அறிந்துகொள்வர்.
- புத்திலக்கியத்தின் புதுமைகளை அறிவர்.
- காப்பிய, வரலாற்று மாந்தர்களை நவீன மொழியில் நாடகமாக்கும் உத்திகளை அறிவர்.
- உலகத்தின் பல்வேறு நாடுகளின் வளர்ச்சிகளையும் மாந்தர்களின் பண்பு நலன்களையும் அறிவர்
- இன்றைய இலக்கியப் படைப்புச் சூழலை அறிந்து கொள்வதால் படைப்பிலக்கியவதிகளாகத் திகழ்ந்திடும் ஆர்வம் பெறுவர்.

### CCII இக்கால இலக்கியம் -II உரைநடை,புனைகதை

**கற்றல் விளைவுகள் (Course OutCome)**

- தமிழ் உரைநடையில் திறன் பெறுவர்.
- காப்பியப் பயில்வில் தெளிவு பெறுவர்.
- தமிழ் உரைநடை வரலாற்றினை அறிந்துகொள்வர்.
- சிறுகதை உத்திகளை அறிந்து படைப்பாக்க முயற்சியில் ஈடுபடுவர்.
- புதின இலக்கியக் கதைக் களங்களில் தெளிவு பெறுவர்.
- தமிழ் ஆளுமைகள் அவர்களின் படைப்புப் பின்னணி குறித்து

அறிந்துகொள்வர்.

## <u>CC III சிற்றிலக்கியம்</u>

**கற்றல் விளைவுகள் (Course OutCome)**

- இடைக்கால இலக்கியப் படைப்புச் சூழலை அறிந்து கொள்வதால் இலக்கிய வளர்ச்சிப் போக்கின் மாற்றங்களை அறிந்துகொள்வர்.
- படைப்பிலக்கிய வகைமை உத்திகளை அறிந்துகொள்வர்.
- இயற்கை வளத்தினை அக்கால மக்கள் போற்றிய திறத்தினை அறிந்துகொள்வர்.
- சிறந்த சிற்றிலக்கியங்கள் குறித்துத் தெளிவு பெறுவர்.

## <u>CC IV சமய இலக்கியம்</u>

**கற்றல் விளைவுகள் (Course OutCome)**

- ஆன்மீக அருளாளர்களின் மெய்மையான தொண்டுகளை அறிவர்.
- அற உணர்வே ஆன்மீகத்தின் அடிப்படையாக இருக்கவேண்டும் என்பதை அறிவர்.
- பிறருக்கு உதவுதலும் அன்பு காட்டுதலும் சமயத்தின் அடிப்படை என்பதை உணர்வர்.
- சமய நல்லிணக்க உணர்வு பெறுவர்.

## CC Vதொல்காப்பியம் – எழுத்ததிகாரம்- இளம்பூரணம்

**கற்றல் விளைவுகள் (Course OutCome)**

- தமிழ் மொழித்திறனில் மேம்பாடடைவர்.
- எழுத்திலக்கணக் கோட்பாடுகளை அறிந்துகொள்வர்.
- தமிழில் கலந்துள்ள பிறமொழிச் சொற்கள் பலவற்றை எளிதில் இனம் காண்பர்.
- தமிழ் எழுத்துக்களின் ஒலிப்பு முறை குறித்த தெளிவு பெறுவர்.
- தமிழ் எழுத்திலக்கண மரபில் தேர்ச்சி பெறுவர்.

## இரண்டாம் பருவம்

## CC VIகாப்பிய இலக்கியம்

**கற்றல் விளைவுகள் (Course OutCome)**

- காப்பிய இலக்கியக்  கட்டமைப்பு, காப்பிய உத்திகளை அறிந்து கொள்வர் .
- காலந்தோறும் காப்பியப் பாடுபொருள்களில் நிழ்ந்துள்ள மாற்றங்கள் அவற்றிற்கான தேவைகள் குறித்து உணர்வர்.
- அக்கால அரசியல், சமுதாயச்  சூழல்களை அறிந்துகொள்வர்.
- இயற்கைச் சூழல்களைப் பாதுகாக்க வேண்டியதன் இன்றியமையாமையை உணர்வர்.
- சொல்லாடல் திறன் பெறுவர்.

## CC VII அற இலக்கியம்

**கற்றல் விளைவுகள் (Course OutCome)**

- அற இலக்கியம் தோன்றுவதற்கான அரசியல், சமுதாய, வாழ்வியல் சூழல்களை அறிந்துகொள்வர்.
- தமிழரின் அறக் கோட்பாடுகளின் தனித்தன்மைகளையும் சிறப்புகளையும் அறிந்து கொள்வர்.
- அறப் பண்புகளை வளர்த்துக்கொண்டு வாழ்வில் மேன்மையடைவர்.
- தனித் திறன்களை மேம்படுத்திக் கொள்வர்.
- நிர்வாகத் திறன் பெறுவர்.
- வாழ்வியல் முறைகள் காலந்தோறும் மாற்றத்திற்கு உட்பட்டவை என்பதில் தெளிவு பெறுவர்.

## CC VIIIசங்க இலக்கியம் - 1(எட்டுத்தொகை)

**கற்றல் விளைவுகள் (Course OutCome)**

- தமிழர் தம் அக வாழ்வியல் அழகியலை அறிந்துகொள்வர்.
- அகவாழ்வியல் நுட்பங்களை உணர்ந்து அக வாழ்க்கையைச் செம்மைப் படுத்திக்கொள்வர்.
- திணைக் கோட்பாட்டுச் சிறப்பினை அறிவர்.
- பழந்தமிழரின் அரசியல் நெறிகளின் மேன்மையை அறிவர்.
- அற நெறி மானிட வாழ்வை மேம்படுத்தும் என்பதை உணர்வர்.
- மனித உறவுகளின் மாண்பினை உணர்வர்.
- சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் கலையில் தேர்ச்சி பெறுவர்.
- சிறந்த மனித வாழ்வுக்கு அடிப்படையான பல்வேறு கூறுகளை

அறிந்துகொள்வர்.

- தமிழர்தம் தொன்மையான இலக்கியச் செழுமையை உணர்வர்.
- 1. பழந்தமிழ் இலக்கியம் கற்பிக்கும் வல்லமை பெறுவர்.

## CCIXதொல்காப்பியம் – சொல்லதிகாரம்– சேனாவரையம்

**கற்றல் விளைவுகள் (Course OutCome)**

- சொல்லிலக்கணக் கோட்பாடுகளில் தெளிவு பெறுவர்.
- மொழித்திறனில் வல்லமை பெறுவர்.
- சொற்களின் வகைகள், பயன்பாட்டு நிலைகளை அறிவர்.
- தொடராக்க வல்லமை பெறுவர்.
- தமிழர்களின் சொல்லிலக்கணக் கோட்பாடு தகவல் நோக்கம் மட்டுமன்றி வாழ்வியல் நோக்கங்களையும் உள்ளடக்கியது என்பதை உணர்வர்.
- பெரியோர் கருத்துகளில் மதிப்பு கொள்வர்.
- கருத்துரைக்கும், கருத்து மறுக்கும் முறைகளில் உயர் பண்பு பெறுவர்.

## OECI பெண்ணியம்

**கற்றல் விளைவுகள் (Course OutCome)**

- பாலினச் சமத்துவ உணர்வு பெறுவர்.
- பாலினச் சமத்துவத்தின் தேவையை உணர்வர்.
- பாலினச் சமத்துவ வரலாற்றில் சான்றோர் செய்துள்ள முயற்சிகளை அறிவர்.
- இல்லற, சமுதாய வாழ்வின் மேன்மைக்குப் பாலினச் சமத்துவம் முதன்மையானது என்ற உணர்வைப் பெறுவர்.
- நவீன இலக்கியப் படைப்பு முறைகள், திறனாய்வு முறைகள் குறித்துத்

தெளிவு  பெறுவர்.

- பெண்ணிய நோக்கிலான ஆய்வுகளை மேற்கொள்ள ஊக்கம் பெறுவர்.

## OECI தமிழகக் கலைகளும்  பண்பாடும்

**கற்றல் விளைவுகள் (Course OutCome)**

- தமிழகக் கலைகள் குறித்து அறிந்துகொள்வதால் குறிக்கத் தக்க அல்லது இன்றைய பயன்பாட்டுக்கு உகந்த கலைகளில் உள்ள தொழில் வாய்ப்புகளை அறிவர்.
- அழகுக் கலைகள் சார்ந்த தொழில் வாய்ப்புகளை அறிவர்.
- கலைகளுக்கும் பண்பாட்டுக்குமான தொடர்பை உணர்வதால் கலை வளர்ச்சிக்குத் துணை புரிவது  குறித்துச் சிந்திப்பர்.
- தமிழர் தம் பண்பாட்டுக் கூறுகளை அறிந்துகொள்வதால் பண்பட்ட வாழ்வியல் கூறுகளைப் பின்பற்றவேண்டும் என்றஎண்ணத்தினை ஏற்படுத்திக் கொள்வர்.
- இருபதாம் நூற்றாண்டின் பண்பாட்டு மாற்றத்தில் ஊடகங்களின் பின்புலம் குறித்து அறிவதால் ஊடகத் தாக்கங்களில் விழிப்புணர்வு கொள்வர்.

## மூன்றாம் பருவம்

## CCX சங்க இலக்கியம் - 2பத்துப்பாட்டு

**கற்றல் விளைவுகள் (Course OutCome)**

- இயற்கையோடியைந்த வாழ்வே பழந்தமிழரின் வாழ்வியலில் முதன்மை பெற்றிருந்தமையை அறிவர்.

- ஆறுகளையும், இயற்கை வளங்களையும் பழந்தமிழர் போற்றி வாழ்ந்தனர் என்பதை அறிந்துகொள்வர்.
- பழந்தமிழரின் செல்வ வளத்தையும், கடல் கடந்த வணிகச் சிறப்பையும் அறிவர்.
- பழந்தமிழ் இலக்கியம் பயிலும் வல்லமை பெறுவர்.
- பழந்தமிழரின் அரசியல் அறத்தையும், வெற்றிச் சிறப்பையும் அறிவர்.
- ஈதல், இசைபட வாழ்தலே மனித வாழ்வியலின் தலையாய நோக்கம் என்பதை உணர்வர்.

## CCXI ஒப்பீட்டு நோக்கில் உலகச் செம்மொழிகள்

**கற்றல் விளைவுகள் (Course OutCome)**

- உலகச் செம்மொழி இலக்கியங்கள் குறித்து அறிமுகம் பெறுவர்.
- தமிழ் மொழியின் இலக்கியவளத்தை அறிவர்.
- ஒப்பீடு ஆய்ந்துணரும் திறன் பெறுவர்.
- உலக அளவில் தனித்த சிறப்புடைய தமிழின் பெருமையை உணர்வர்.
- மானுட விழுமியங்களே பழந்தமிழ் இலக்கியங்களில் முதன்மை பெற்றிருந்தமையை உணர்வர்.
- செம்மொழிப் பண்புகள் அனைத்தும் உடைய மொழி தமிழ் என்பதை அறிந்துகொள்வர்.

## CC XIIதொல்காப்பியம் – பொருளதிகாரம் - முன் 5 இயல்கள் நச்சினார்க்கினியம்

**கற்றல் விளைவுகள் (Course OutCome)**

- பொருள் இலக்கண அடிப்படைகளை உணர்வர்.

- அகத்திணைக் கோட்பாடுகளின் வழி அக வாழ்வியல் கூறுகளை அறிவர்.
- அக்காலப் போர்முறைகள், மன்னர் - படை வீரர்கள் உறவு நிலை முதலியவற்றை அறிந்துகொள்வர்.
- புறத்திணைப் பாகுபாட்டில் வாழ்வியல்கூறுகள் பொதிந்துள்ளமையை உணர்வர்.
- தமிழர்கள் பொருள் இலக்கணக் கோட்பாட்டில் மானிட வாழ்வின் உயர்வே முதன்மை பெற்றிருந்தமயை உணர்வர்.
- சங்க இலக்கியங்களை முறையாகப் பயிலும் ஆற்றல் பெறுவர்.

## ECI மொழி பெயர்ப்பியல்

**கற்றல் விளைவுகள் (Course OutCome)**

- மொழிபெயர்ப்புத் துறையில் பணிவாய்ப்புபெறத் தகுதி பெறுவர்.
- மொழிபெயர்ப்பின் இன்றைய தேவைகளை உணர்வர்.
- மொழிபெயர்ப்பின் தன்மைகள், வகைகள் குறித்துத் தெளிவு பெறுவர்.
- மொழிபெயர்ப்பாளரின் தகுதிகளை அறிந்துகொண்டு மொழிபெயர்ப்புத் திறன்களை வளர்த்துக் கொள்வர்.
- மொழி பெயர்ப்பு ஒரு கலை என்பதை உணர்ந்து அதன் நுட்பங்களைக் கற்றுக்கொள்வர்.

## ECIபொது மொழியியல்

**கற்றல் விளைவுகள் (Course OutCome)**

- மொழியியல் குறித்த அறிவு பெறுவர்.
- மொழியின் கட்டமைப்பினை உணர்வதால் மொழித்திறனில் வல்லமை பெறுவர்.
- ஒலியியல், உருபனியல் கோட்பாடுகளை அறிந்துகொள்வதால் இலக்கணத் தெளிவு பெறுவர்.

- தொடரியல் தொடரமைப்பு குறித்துத் தெளிவு பெறுவதால் படைப்பிலக்கிய ஆற்றல் பெறுவர்.
- மொழியியல் கற்பதால் பிறமொழிகளை ஏளிதில் கற்கும் வல்லமை பெறுவர்.

## ECII பெரியாரியல்

**கற்றல் விளைவுகள் (Course OutCome)**

- சமுதாயச் சீர்திருத்தச் சிந்தனைகளை வளர்த்துக்கொள்வர்.
- சமுதாயச் சீர்திருத்த வரலாற்றை அறிந்துகொள்வர்.
- பாலினச் சமத்துவ உணர்வு பெறுவர்.
- சாதி வேறுபாட்டு உணர்வின் குறைகளையும், தீமைகளையும் உணர்வர்.
- பொருளாதாரச் சமத்துவத்தின் மீது விருப்பம் கொள்வர்.
- பகுத்தறிவுச் சிந்தனைகளை வளர்த்துக்கொள்வர்.

## ECII இந்தியத் தத்துவ இயல்

**கற்றல் விளைவுகள் (Course OutCome)**

- கருத்துநிறுவுதல் கருத்துமறுத்துரைத்தலில் ஆற்றல்பெறுவர் கொள்வர்.
- இந்தியத் தத்துவ வரலாற்றை அறிந்துகொள்வர்.
- இந்தியத் தத்துவக் கோட்பாடுகளை அறிவர்.
- சமயங்களுக்கும் தத்துவங்களுக்குமான தொடர்பை அறிந்துகொள்வர்.
- சமயங்களுக்கும் இலக்கியங்களுக்குமான தொடர்பை அறிந்து கொள்வர்.

## நான்காம் பருவம்

### CCXIII இலக்கியக் கொள்கைகளும் திறனாய்வும்

**கற்றல் விளைவுகள் (Course OutCome)**

- இலக்கியக் கொள்கைகள் காலமாற்றத்திற்கேற்ப மாற்றமும் வளர்ச்சியும் பெற்றுள்ளமையை அறிந்துகொள்வர்.
- சங்க இலக்கியக் கொள்கைகள் முழுமையான மனித வாழ்வியலோடு இணைந்ததாக இருந்தமையை உணர்வர்.
- மனித சமுதாயக் குறைபாடுகளைக் களைந்து, வாழ்வியல் விழுமியங்களை எடுத்துரைப்பதே அற இலக்கியக் கொள்கைகளாக விளங்கியமையை உணர்வர்.
- சமயப் பின்னணிகளும் பல்வேறு சமயங்களின் தோற்றமும் வருகையும் புதிய இலக்கிய வகைமைகளைப் பாடும் முயற்சியும் சமய இலக்கிய, சிற்றிலக்கியக் கொள்கை உருவாக்கத்திற்குக் காரணம் என்பதை அறிவர்.
- அரசியல், சமுதாயப் பின்னணிகளே இக்கால இலக்கியக் கொள்கைகளை உருவாக்கம் செய்தன என்பதை அறிந்துகொள்வர்.

**CC XIVதொல்காப்பியம் – பொருளதிகாரம் - பின் 4 இயல்கள் பேராசிரியம்**

**கற்றல் விளைவுகள் (Course OutCome)**

- கவிதைச் சுவையுணர் திறன்பெறுவர்.
- இலக்கியத்தில் அணிகளின் இன்றியமையாமையையும், அணிகளின் பயன்பாட்டு முறைகளையும் அறிந்துகொள்வர்.
- யாப்பிலக்கணத்தில் தெளிவு பெறுவர்.
- மரபுக் கவிதையாக்கத் திறன் பெறுவர்.
- மரபு இலக்கியப் பயில்திறன் பெறுவர்.

## ECIII ஊடகவியல்

**கற்றல் விளைவுகள் (Course OutCome)**

- ஊடகத்துறையில் பணிவாய்ப்பு பெறும் திறன் பெறுவர்.
- செய்தி ஊடங்கள் அரசியல், சமுதாயக் களங்களில் ஏற்படுத்தும் விளைவுகளை அறிந்துகொள்வதால் ஊடகத்துறையில் ஆர்வம் கொள்வர்.
- தமிழ் இலக்கியப் பயிற்சியும், இலக்கியத் திறன் மேம்பாடும் ஊடகத்துறை வேலை வாய்ப்புக்குத் துணைபுரியும் என்பதை உணர்வர்.
- தமிழ் இலக்கண அறிவு ஊடக வேலை வாய்ப்புக்கான அடிப்படை என்பதை உணர்வர்.
- படைப்பிலக்கியத் திறனை வளர்த்துக்கொள்ளும் ஆர்வம் பெறுவர்.
- ஊடகத்துறை குறித்த விரிவான அறிவுத்திறனால் ஊடகத்துறைகளில் வேலைவாய்ப்பு பெறுவர்.

## ECIII தமிழ் அச்சுக்கலை

**கற்றல் விளைவுகள் (Course OutCome)**

- சுயவேலை வாய்ப்பினைஏற்படுத்திக்கொள்வர்.
- அச்சகத் துறையின்அடிப்படைகளை அறிவர்.
- அச்சாக்கத்தின் அனைத்துக் கூறுகளிலும் தெளிவு பெறுவர்.
- கணினி அச்சு முறைகளில் தேர்ச்சி பெறுவர்.
- பல்வேறு அச்சாக்க முறைகளில் அறிமுகம் பெறுவர்.

## ECIVஉலக  இலக்கியங்கள்

**கற்றல் விளைவுகள் (Course OutCome)**

- உலக இலக்கியங்களில்  அறிமுகம் பெறுவர்.
- புதிய இலக்கிய உத்திகளையும், உலக இலக்கியப் போக்குகளையும் அறிந்துகொள்வர்.
- புகழ்பெற்ற உலகப் படைபுகளைக்  கற்கவேண்டிய தேவையை உணர்வர்.
- நவீன இலக்கிய வடிவங்களுக்கான அடிப்படைகளை அறிந்துகொள்வர்.
- ஒப்பிலக்கிய ஆய்வுகளை மேற்கொள்ளும் ஆர்வம்கொள்வர்.
- மொழிபெயர்ப்பின் தேவைகளை உணர்வர்.

## ECIV இந்திய இலக்கியங்கள்

**கற்றல் விளைவுகள் (Course OutCome)**

- இந்திய இலக்கியப் படைப்புகளின் வழி இந்திய மக்களின் வாழ்வியல் குறித்து அறிந்துகொள்வர்.
- இந்திய மொழி இலக்கியப் படைப்புகளுக்கிடையேயுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை அறிவர்.
- புகழ்பெற்ற இந்திய இலக்கிய ஆளுமைகளை அறிந்துகொள்வர்.

மொழி பெயர்ப்பின் தேவையை உணர்வர்.